
திரிணை - சே

உ

கணபதி துணை

# பயனுள்ள கட்டுரைகள் பத்து



காசி விநாயகர் தேவஸ்தானத்தின்
முகப்புத் தோற்றம்.


பாலர் ஞானோதய சபையின்
இருபத்தோராவது வெளியீடு

காசிவிநாயகர் தேவஸ்தானம்,
வீணாக்கடவை
தெல்லிப்பழை.
7 - 2 - 1993.

உ

கணபதி துணை

# பயனுள்ள கட்டுரைகள் பத்து




காசி விநாயகர் தேவஸ்தானத்தின்
முகப்புத் தோற்றம்

பாலர் ஞானோதய சபையின்
இருபத்தோராவது வெளியீடு

காசிவிநாயகர் தேவஸ்தானம்,
வீணாக்கடவை,
தெல்லிப்பழை.
7 - 2 - 1993.

விலை: 35 ரூபா

உ



பாலர் ஞானோதய சபையின் ஸ்தாபகர்

தலைவர்

அமரர்

சிவஸ்ரீ மு. சிவகடாக்ஷக் குருக்கள் அவர்கள்

ஓம்

# என்னுரை

மாணவர் உலகம் சமய நூல்களைக் கற்று ஓர் நிரம்பிய சமய அறிவைப் பெறவேண்டும். இதுவே நம் சபையினதும் எமதும் நோக்க மாகும். எமது தேவஸ்தானத்திலே நாற்பத்தைந்து ஆண்டிற்கு மேலாக நடைபெற்று வரும் பாலர் ஞானோதய சபையின் செயற்பாடுகள் அனைவரும் அறிந்ததே. சமய விடயங்களைப் பற்றிச் சிந்தனை செய்யவே நேரம் இல்லாது அல்லலுறும் இன்றைய கால கட்டத்தில் இத்தகைய கட்டுரைகளை வாசிப்பதன் மூலம் குறைந்த அளவிலாவது சமய அறிவை மாணவர்கள் பெற முடியும் என்பது எமது நம்பிக்கை. கட்டுரைத் தொகுப்பின் இரண்டாவது தொகுதியாக இந்நூல் வெளிவருகின்றது. பத்து வெவ்வேறு விடயங்களைக் கொண்ட ஓர் தொகுப்பு நூலாக இது அமைந்துள்ளது. ஞானோதய சபையின் இருபத்தோராவது வெளியீடாக இதனை வெளியிடுகின்றோம்.

எமது வேண்டுகோளை ஏற்று ஆழமான கருத்துச் செறிவுள்ள மதிப்பீட்டுரையைச் சைவப் பெரியார், பண்டிதர் மு. கந்தையா அவர்கள் வழங்கியுள்ளார்கள். சைவ உலகிற்குப் பணிகள் பல புரிந்து வரும் இப்பெரியார் எமது நன்மதிப்பிற்கும் நன்றிக்கும் உரியவராவர். பண்டிதர் அவர்கள் நீண்டகாலம் வாழ்ந்து சைவப் பணிபுரிய காசி ஐங்கரன் கருணை கிட்டுவதாக.

எமது வெளியீடுகளுக்குப் பெருமதிப்புக் கொடுத்துச் சிறந்த முறையில் அச்சேற்றித் தருபவர் மஹாத்மா அச்சக முதல்வர் திரு. ந. தெய்வேந்திரன் அவர்கள். அதிபர் அவர்கட்கும் சக ஊழியர்கட்கும் காசி விநாயகப் பெருமானின் திருவருள் என்றும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

காசி விநாயகர் தேவஸ்தானம்,
வீணாக்கடவை,
தெல்லிப்பழை,
1-7-92.

இ. கணேசலிங்கக் குருக்கள்
தலைவர்
பா. ஞா. சபை

சைவசித்தாந்தப் பேரறிஞர் பண்டிதர் மு. கந்தையா

அவர்கள் வழங்கிய

# மதிப்பீட்டுரை

விருட்சஞ் செழிப்புற வேண்டில் வேருக்கு நீரூற்றுதல் அன்றி விவேகமான வழி வேறின்றாம். தமிழ் சைவப் பண்பாட்டு நன்னிலை பற்றிச் சிந்திப்போர் செயலாற்றுவோர் யாவரும் ஆவசியகங் கருத்திற் கொள்ள வேண்டியதிதுவொன்று. 'அறஞ்செய விரும்பு' முதலாக வரும் ஆத்திசூடி உண்மைகளும் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' முதலாக வரும் கொன்றை வேந்தன் உண்மைகளும் ''உலகத்துக்குக் கருத்தா யாவர்?'' முதலாக வருஞ் சைவ வினாவிடை உண்மைகளும் போல்வன தமிழ்ச் சைவப் பண்பாட்டின் வேர்களெனத் தகும். நம்மவர் அறிவரங்கிலுஞ் செயலரங்கிலும் அவை புதுப்பசுமை மிளிர நிற்குமாறு சாதனை போதனை மூலம் நீரூற்றுதலும் அதே வேளை இவற்றுக்குப் பகைப் புலங்களாகும். அந்நிய மோகக் களைகளைச் சுட்டிக்காட்டிக் களைதலும் திர்ந்த நோக்குடையார் யாவர்க்குந் தலைக்கடனாம். அதுவன்றி வேர்களை வெட்டிவிட்டுச் செடி வாடாமல் நிற்க நீரூற்றுதல் போன்ற செயற்பாடுகள் பயனிலவாம்.

புராதன ஞான மூர்த்தியாகிய காசிப் பிள்ளையார் சேவையிலிருக்கும் சிவஸ்ரீ கணேசலிங்கக் குருக்கள் இதனைத் துடியாக உணர்ந்து அடக்கச் செறிவான அறிவாசாரப் பெருமை புலப்படத் தமது ஆலயச் சூழலில் சாதனையாலும் போதனையாலும் நிகழ்த்திவரும் உருப்படியான சேவைகள் மகிழ்ச்சிக்குரிய நன் முன் மாதிரிகளாம்.

கோயில் அமைப்புக்குள்ளேயே கலாமண்டபமொன்றும் அமைத்துத் தமிழ் சைவச் சிறார்கள் தம் பண்பாட்டு விருத்திக்கான அடிப்படை உண்மை விளக்கங்களில் தேர்ச்சி பெறுமாறு அவர்கள் புரிந்து வருஞ் சேவைநலங்கள் பிரசித்தமானவை. சாதனைக்கு ஊட்டமளிக்கும் போதனைகளும் பிரசித்தமாகும் வகையில் அவர்கள் காலாகாலங்களில் வெளியிட்டுவரும் நூற் பிரசுரங்கள் அர்த்தபுஷ்டியானவை.

அவ்வகையில் தற்போது வெளிவரும் இந்நூலும் தமிழ்ச் சைவப் பண்பாட்டு வேர்களுக்கு நீரூற்றுந் தன்மையதாகவே அமைகின்றது. அப்பண்பாட்டு வேர்களாகிய விரதாநுட்டானம், அங்காவய வழிபாடு, தமிழ்ப்பற்று, கோயில் தொழல், நிலையாமையுணர்வு, தர்மசிந்தனை போன்ற மூல உண்மைகளைக் கற்போர் உளங்கொளத்தக்க வகையில் உணர்த்தி வைக்கின்றது இந்நூல்.

எடுத்துக் கொண்ட பொருளின் உணர்வடிப்படையை எளிதிற் பிரதிபலித்தற்கும் இதனைக் கற்றற்குரியார் எனக் குருக்கள் உளங் கொண்டிருக்குஞ் சிறுவர்களின் பிஞ்சுள்ளங்களைக் கவர்தற்கும் போதுமளவான இலகுத் தன்மையும் தெளிவும் வாய்த்திருக்கும் குருக்களின் வசனநடை பாராட்டத் தகும்.

ஏழாலை.
30 - 06 - 92.

மு. கந்தையா

உ
சிவமயம்

# விநாயக விரதம்

## ஐங்கரன் அருள் பெறின் இங்கெமக்கு இடர் இராது.

" ஒற்றை மருப்பும் ஓரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் — பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனத்தி லெப்பொழுதும்
கொண்டக்கால் வாராது கூற்று. "

விநாயகர் ஓங்கார ரூபமாக அமைந்தவர். அவருக்கு ஐங்கரன், ஆனைமுகன், ஏகதந்தன், விக்கினேஸ்வரன், கணேசன் முதலாய ஆயிரம் நாமங்களுக்கு மேல் உண்டு. சைவசமயிகள் எக்காரியத்தை ஆரம்பிக்கும்போதும் விநாயக வழிபாடு செய்தே ஆரம்பிப்பர். சர்வவியாபியாகிய பரமசிவன்கூட விநாயகரைச் சிந்தித்த பின்னரே எதனையும் தொடங்குவார். இல்லையேல் இடையூறு ஏற்படும். இதற்கு உதாரணமாக விநாயகப்பெருமானது போற்றித்திருவகவலில் - " நிலைபெற நிற்குநெடுந்தேர் தன்னில் விக்கின விநாயக நமவெனச் சிக்கென இறைவன் செப்பா தேறலின் தச்சறுத், தமைத்த, தகைமணி நெடுந்தே, ரச்சறுத் தருளு மரசே போற்றி..........." என்ற அடிகள் விளக்குகின்றன.

விநாயகர் சிவனின் மூர்த்தம். எனவே இக்கதை விநாயக மூர்த்த பரத்துவத்தைச் சுட்டிக் காட்டவே அமைந்ததெனலாம்.

விநாயகப் பெருமானுடைய அவதாரங்களையும், தத்துவங்களையும் விநாயக புராணம் விரிவாக எடுத்தியம்புகின்றது. ஆதிகாலத்தில் முனிவர்கள், அரசர்கள் முதலாயினோர் விநாயகரை வழிபட்டு அருள் பெற்ற வரலாறுகளை மேற்படி புராணத்தில் பரக்கக் காணலாம். உலக மக்கள் விநாயகரைப் பிரம்மச்சாரி என்று கூறுவர். விநாயக புராணத்தில் ஓர் அவதாரத்தில் வல்லபையும், மற்றோர் அவதாரத்தில் சித்தி புத்தி என்னும் இருவரும் விநாயக சக்திகள் ஆனார்கள் என்றும் கூறப்படுகின்றது.

விநாயகருக்குரிய விரதங்களுள் இரண்டு முக்கியமானவை. ஒன்று விநாயக சதுர்த்தி; இது மாதந்தோறும் அமாவாசை வந்து நான்காம் நாள் வருவது. ஆவணிச் சதுர்த்தி விசேடமாக அநுட்டிக்கப்படுவது. மற்றது விநாயகசஷ்டி. இது கார்த்திகை மாதக் கிருஷ்ணபக்ஷப் பிரதமை முதல் மார்கழி மாதச் சுக்கில பக்ஷ சஷ்டியீறாக இருபத்தொரு நாளும் விநாயகரைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாகும். இவ்விரதம் அநுட்டிக்கும் முறையினைப் பிள்ளையார் கதையில் பின் வரும் அடிகள் விளக்குகின்றன.

"கார்த்திகைக், கார்த்திகைக் கழிந்த பின்னாளி
லார்த்த லிங்கத் தணியிழை வாங்கி
யிருபத் தோரிழை யின்புறக் கட்டி
யொருபோ துண்டி யுண்டொரு மனமாய் ......
வரைமகன் மதலையை வழிபா டாற்றி—"

என வருவது நோக்கற்பாலது. விநாயகர் எழுந்தருளியுள்ள ஆலயந்தோறும் இவ்விரதம் அநுட்டிக்கப்படுவது வழக்கம்.

எமது காசி விநாயகர் தேவஸ்தானத்திலே எழுந்தருளியுள்ள பஞ்சமுக விநாயகப் பெருமானுக்கு இந்த விநாயக சஷ்டி இருபது நாளும் இலட்சார்ச்சனை நடைபெறும். இருபத்தொராம் நாள் அஷ்டோத்தரசத சங்காபிஷேகம், விசேட ஆராதனைகள் என்பன இடம் பெற்றபின் "விநாயகர் பெருங்கதை" படிக்கப்பட்டு, உற்சவம் நிகழும். காசிவிநாயகர் அனைவருக்கும் கருணை பாலித்து வருகின்றார்.

இந்து சாதனம் *8 - 12 - 1989*

★

# தமிழின் சிறப்பு

## தமிழ் மக்கள் செய்யவேண்டிய தொண்டு

உலகிலுள்ள மக்களால் பல்வேறு மொழிகள் பேசப்படுகின்றன. ஒவ்வோர் சாதியினர்க்கும் ஒவ்வொரு மொழி உள்ளது. எமது நாட்டின் கண் முக்கியமான நான்கு சாதியினர் வசிக்கின்றார்கள். அவர்கள் சிங்களவர், தமிழர், சோனகர், பறங்கியர் என அழைக்கப்படுகின்றனர். சிங்களவர் சிங்களத்தையும், சோனகர் தமிழையும், தமிழர் தமிழையும், பறங்கியர் ஆங்கிலத்தையும் பேசுகிறார்கள். ஆங்கில மொழியைப் பொது மொழியாக எல்லாச் சாதியினரும் பேசுகின்றார்கள். தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர், சோனகர் ஆகிய நாம் அதனை ஆர்வத்துடன் கற்க வேண்டும்.

எமது முன்னோர் தமிழை நன்கு கற்றிருந்தார்கள். தமிழின் இனிமையையும் அதன் ஆழ்ந்த கருத்துக்களையும் நன்கு அறிந்திருந் தார்கள். நாம் கற்பதற்கென நூற்றுக் கணக்கான தமிழ் நூல்களை இயற்றி வெளியிட்டார்கள். அது மாத்திரமா? ஏட்டுச் சுவடிகளில் இருந்த எத்தனையோ அரும் பொக்கிஷங்களை எல்லாம் புத்தக ரூபத்தில் வரச் செய்தார்கள். இந்தப் புலவர் பெருமக்களின் சேவை யால் அல்லவா இன்று நாம் தமிழைச் சுலபமாகக் கற்க முடிகின்றது. இவ்வாறு தமிழை வளர்த்த பெரியார்களுள் ஒருவரான வரகவி, சுப்பிரமணியபாரதி அவர்கள் பல மொழிகளையும் கற்றார்கள். அவை யாவற்றிலும் தமிழே இனிமை தரும் என்பதை உணர்ந்தார் கள். உடனே ''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்குங் காணோம்'' என்று பாடினார்கள். இப்பெரியாரின் வாக்கியம் ஒன்றே தமிழின் பெருமையை வெள்ளிடை மலைபோல் விளக்குகின்றது.

தமிழ் அழியாத இலக்கண வரம்பைக் கொண்டது. எம் இறைவ னான சிவபெருமானால் "பித்தா பிறைசூடி", "உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்", "தோடுடைய செவியன்" என்றெல்லாம் அடியெடுத்துக் கொடுக்கப்பட்ட பெருமையையுடையது. இன்னும் நாம் பிறந்து சிறுபராயத்திலே எமது தாய்தந்தையரை (சம்பந்தர் சிவபிரானை அழைத்தது போல்) ''அம்மே அப்பா'' என்று அழைத் ததும் தேன் போல் இனிய செந்தமிழினாலல்லவா? தமிழ்த் தெய்வ மாகிய முருகன் கடைச்சங்க காலத்தில் புலவர்களுள் ஒருவராயிருந்து தமிழை ஆராய்ந்தும், ஒளவையாரின் புலமையை உலகுக்கு அறியும்படி செய்தும் தமிழை வளர்த்தாரல்லவா? இவ்வாறு பலராலும் போற்றப் பட்டும் வளர்க்கப்பட்டும் வரும்மொழி தமிழ்மொழியாகும்.

தெய்வ சம்பந்தமானதும் இலகுவான நடையில் யாவர்க்கும் விளங்கக்கூடியதுமான மொழி தமிழ். உதாரணமாக "அறஞ்செய விரும்பு" என்னும் அடியில் தொடங்கி எத்தனையோ தத்துவங்களை எடுத்துக் கூறுவதும் இறவாத தன்மையைக் கொண்டதும் தமிழே யாகும். முற்காலத்தில் தமிழ் அரசர்களாகிய சேர, சோழ, பாண்டி யர்கள் தமிழை வளர்த்தார்கள். தமிழ் வித்துவான்களுக்குத் தகுந்த சன்மானஞ் செய்தார்கள். இதனால் தமிழ் அன்னை சீரும் சிறப்பும் பெற்று விளங்கினாள். பின் ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கியதும் இவைகள் யாவும் அற்றுப்போயின. "அரசனெவ்வழி குடிகளுமவ்வழி" என்ற கூற்றிற்கிணங்க யாவரும் தமிழைப் புறக்கணிக்கத் தலைப்பட் டனர். மீண்டும் சுதந்திரமடைந்ததும் தாய்மொழி சிறப்படையுங் காலம் ஆரம்பமாகியுள்ளது. இதனைத் தமிழ்மக்கள் பயன்படுத்தி ஆவன செய்யவேண்டும்.

'தெய்வப் புலவர்' என யாவராலும் போற்றப்படும் திருவள்ளுவ நாயனார் திருக்குறள் என்னும் திவ்விய நூலைத் தமிழர்களுக்கென இயற்றியுள்ளார். திருக்குறளின் மேலான கருத்துக்களைக் கண்ணுற்ற

மற்றும் சாதியினர் தங்கள் பாஷைகளிலெல்லாம் அதை மொழி பெயர்த்துள்ளார்கள். இது ஒன்றே தமிழின் பெருமைக்குச் சான்று பகர்கின்றது. திருக்குறள் 130 அதிகாரங்களைக் கொண்டது. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துப் பாட்டுக்கள் வீதம் 1330 குறட்பாக்களையுடையது. இந்த 1330 குறட்பாக்களும் விலை மதித்தற்கரிய பொக்கிஷமாக அமைந்துள்ளது. ஒவ்வொரு குறளும் ஒழுகிய ஓசையும் விழுமிய கருத்துமுடையது. இங்ஙனமாக இன்னும் எத்தனையோ சமய சாஸ்திரங்கள் இலக்கண இலக்கிய சம்பந்தமான நூல்கள் யாவும் தமிழ் மொழியில் அல்லவா மலிந்து கிடக்கின்றன. இவற்றை நாம் அல்லும் பகலும் சிரத்தையுடன் கற்க வேண்டும். அத்துடன் மற்றையோருக்கும் இயன்றளவு உதவி செய்து கற்பிக்கவேண்டும். இவ் வித்தியா தானத்தை விருத்தி செய்வதனால் தமிழன்னை மேன்மையடைவாள். நாமும் நமது தமிழ் மொழியைப் பாதுகாத்தவர்களாவோம்.

இந்து சாதனம் 17 – 06 – 1960

★★

# திருவங்கமாலைச் சிறப்பு

## பிறவிப்பெரும் பயனை அடைய வழி காட்டுவது

அன்பே வடிவமாய கடவுளை அறிஞர் பற்பல விதமாக வணங்குவார்கள். சிலர் புட்பங்களை இட்டும் சிலர் பாமாலைகள் பாடியும், வேறு சிலர் ஸ்ரீ பஞ்சாட்சரம் முதலியவற்றை உச்சரித்தும் வணங்குவார்கள். எம் சமயகுரவர்கள் ஆலயங்கள் தோறும் சென்று பாமாலைகள் சாத்தி இறைவனை வணங்கினார்கள். அங்ஙனம் வணங்கியவர்களுள் உழவாரப் படையாராகிய அப்பர்சுவாமிகள் பாடிய பதிகங்களுள் 'திருவங்கமாலை' மிகவும் சிறந்த கருத்துக்கள் நிறைந்தது. திருவங்கமாலை செப்பும் திவ்விய கருத்துக்கள் யாவும் பொன்போற் போற்றத்தக்கன. அவற்றின் நயங்களைச் சிறிது ஆராய்வோம்.

முதன் முதலாகத் திருவங்கமாலை பாடத் தொடங்கும்போது சுவாமிகள் தலையையே அழைக்கின்றார்; தலையே! நீ என்பு மாலைகளைத் தலையில் அணிந்தவரும், தலைஓட்டைப் பிச்சைப் பாத்திரமாகக் கையில் வைத்திருக்கின்றவருமாகிய தலைவனை வணங்குவாயாகவென்றும், அடுத்த பாடலிற் கண்களை நோக்கிக் கண்களே! நீவிர் கடலில் எழுந்த ஆலகால விடத்தையுண்டவரும், எட்டுத்

தோள்களும் பிரகாசிக்க நடனஞ் செய்கின்றவருமாகிய எம்பிரானைக் காண்பீர்களாகவென்றும் கூறுகின்றார். அவ்விரு பாடல்களையும் இங்கே நோக்குவோம்.

''தலையே நீவணங்காய்
தலை மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீவணங்காய்''

''கண்காள் காண்மின்களோ
கடல் நஞ்சுண்ட கண்டன்றன்னை
யெண்டோள் வீசிநின் றாடும்பி ரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ!''

வாயே நீ வாழ்த்துவாயாக. யாரையெனில்? மதயானையின் தோலை உரித்துப் போர்வையாகச் சாத்தியவரும், பேய்வாழ் காட்டகத்து நின்றாடுபவருமாகிய எம்பெருமானை வாழ்த்துவாயாகவென்றும், மனத்தை நோக்கி மனமே! நீ யாரை நினைக்க வேண்டுமானால் அழகிய புன்சடையை உடையவரும் மலமில்லாதவரும் முகில்கள் படியப்பெற்ற இமயமலையரசன் புத்திரியாகிய பார்வதியின் நாயகரையென்றும், கைகளை அழைத்துக் கைகளே! உங்களைப் படைத்தது எதற்காக? வாசனை நிறைந்த புட்பங்களைத் தூவி நின்று தேவுக்கள் முதலாக யாவரும் வணங்கும் பரமனை வணங்குவதற் காகவே. ஆகையால் நீவிர் அந்தப் பரமனை வணங்குங்கள் என்று அறிவுரை கூறுகின்றார்.

இதுகாறும் அவயவங்களை அழைத்த சுவாமிகள் இப்போ அவயவங்கள் எல்லாம் சேர்ந்த ஆக்கைக்கு நற்புத்தி புகட்டுகின்றார். அப்புத்திமதி எம்மனோர் அனைவருக்கும் நல்வழிகாட்டும் நன்னெறி யாகும். அஃதாவது அரன் வீற்றிருக்கின்ற திருக்கோயில்களை வலம் வந்து கையிலே பூக்களைக் கொண்டு அர்ச்சித்தும் நாவினாலே போற்றியும் வழிபாடு செய்யாத ஆக்கையால் ஒரு பிரயோசனமும் இல்லையென்கின்றார். இதில் எவ்வளவு உண்மை பொதிந்துள்ளது. அதன் பின் கால்களுக்கு ஓர் எச்சரிக்கை விடுகின்றார். கறைக்கண்டர் உறையப்பெற்றதும் கோபுரங்கள் நிறைந்ததுமாகிய ஆலயத்தை வலம் வராத கால்களினால் யாதொரு பிரயோசனமும் இல்லை யென்கின்றார்.

இங்ஙனமாக அப்பர் சுவாமிகள் ஒன்பது பாடல்களில் ஒவ்வோர் அவயவமும் இறைவழிபாட்டிற்கே உரியதென்பதையும் அந்த அவய வங்களால் எவ்வாறு வழிபட வேண்டுமென்பதையும் விரிவாகக் கூறியுள்ளார்.

மானிட யாக்கையைப் பெற்ற நாம் இப்பிறவிப் பயனை எவ்வாறு அடையலாம் என்று உன்னுவோமாயின் அப்பர்சுவாமிகள் இங்கே வழிகாட்டியருளியிருக்கின்றார். உலகப்பொருள்களையே உறுதுணை யென்று நினைத்து அவற்றின் நிலையாமையை அறியாது ஏமாற்ற மடையும் இக்கால மக்கள் இவற்றைச் சிந்திப்பார்களாக.

இந்து சாதனம் 08 - 02 - 1957

★

# சமய ஆசாரமும் சுகாதாரமும்

## பொது வாழ்க்கையில் இன்றியமையாச் சாதனங்கள்

இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே மக்களுக்கு அறிவொளி பரப்பிய மதம் சைவமதம். அதன் கோட்பாடுகளுள் ஒன்றாகத் திகழ்வது ஆசாரம். இந்த ஆசாரத்தை நாம் சரியாகக் கடைப்பிடிப்பதில்லை. ஆனால் இன்று மேல்நாட்டுச் சுகாதார முறை களை ஆராய்ந்து பார்க்கும்போது பண்டைய சமய ஆசாரத்தின் அவசியமும் அதன் பலனும் நன்கு புலப்படும். நம் முன்னோர் கையாண்ட சைவ ஆசாரங்களுக்கும் இன்று நிலவும் சுகாதார விதிகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை நாம் காணமுடிகின் றது. எனவே இதனைப்பற்றிச் சிறிது ஆராய்வாம்.

நாவலர் பெருமான் தமது சைவவினாவிடைகளில் நமக்கு வேண் டிய (சமய) ஆசாரங்களை விளக்கியிருக்கிறார். அவை மதத்திற்கு வேண்டிய ஆசாரங்களாக இருந்தபோதிலும் நம்முடைய பொது வாழ்க்கைக்கும் இன்றியமையாத சாதனங்களாக அமைந்துள்ளன. இவற்றை நாம் நுட்பமாக ஆராய்ந்து பார்க்கும்போது உண்மை நன்கு புலப்படும். நாவலர் பெருமான் தமது சைவ வினாவிடையில் 'சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன் நித்திரை விட்டெழுதல் வேண்டும்' என்று கூறியிருக்கிறார். சுகாதார முறைப்படி பார்க்கும் போது சூரியோதயத்திற்கு முன் நித்திரைவிட்டெழுதலே உடம்பிற்கு நலம் தினந்தோறும் ஸ்நானஞ்செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்தல் வேண்டுமென்றும் கூறுகிறார் ஆறுமுகநாவலர். அதேபோல் சுகாதார விதிகளும் தினமும் ஸ்நானஞ் செய்து உடம்பைச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டுமெனக் கூறுகின்றன,

போசன விதிகளைப்பற்றிக் கூறத் தொடங்கிய நாவலர் அவர்கள் அவற்றுக்கு வேண்டிய சுத்தங்களையெல்லாம் மிகவும் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறார். மேல்நாட்டுச் சுகாதார முறைப்படியும் உணவை மிகவும் சுத்தமான முறையில் தயாரிக்க வேண்டும். உணவு அருந்தும் பாத்திரங்கள் யாவும் சுத்தமாக இருத்தல் வேண்டும். போசனம் பண்ண முன்னும் பண்ணிய பின்னும் வாய் கொப்பளித்துக் கைகழுவ வேண்டும் எனக் கூறப்படுகிறது. இந்த இடத்தில் சமய ஆசாரத்திற்கும் சுகாதாரத்திற்கும் நெருங்கிய ஒற்றுமை இருப்பதைக் காணலாம்.

சைவ சமயத்தவர்களுக்கு அவர்களது ஆலயம், இல்லம், கிணறு யாவும் பரிசுத்தமாக இருக்கவேண்டும். அதே சுத்தத்தைத்தான் சுகாதாரமும் கூறுகின்றது. ''சுத்தம் சோறு தரும்'', ''கூழாயினும் குளித்துக் குடி'' என்பன ஆன்றோர் வாக்குகள், உணவை ஈக்கள் மொய்க்காமல் மூடிவைக்க வேண்டுமென்பது இரு ஆசாரத்திற்கும் பொதுவிதி. இவ்வாறு பல இடங்களில் இரண்டிற்கும் நெருங்கிய தொடர்புகள் உண்டு. இன்று அரசாங்கத்தாரும் வைத்தியரும் போதித்து வரும் சுகாதார விதிகளையெல்லாம் நமது பண்டைய நூல்களில் பரக்கக் காணலாம்.

நம்முன்னோர் சுகாதார விதிகளை உத்தேசித்தே மலசலங் கழிக்கும் இடங்களை வகுத்தார்கள். வழி, குழி, நீர்நிலை, நீர்க்கரை" பூந்தோட்டம், உழுத நிலம், அறுகம் பூமி, பசுமந்தை நிற்கும் இடம், அருவி பாயும் இடம், மலை முதலாய இடங்களிலும் இன்ன பிற இடங்களிலும் மலசலங் கழிக்கக் கூடாது என்று நாவலர் பெருமான் சைவ வினாவிடையில் விளக்கியிருக்கிறார். இதனையே இன்றைய சுகாதாரமும் கூறுகின்றது. எனவே நாம் எந்த ஒரு விஷயத்தைப் பார்த்தாலும் அங்கே சுகாதாரத்திற்கும் சமய ஆசாரத்திற்கும் ஒற்றுமை காணப்படுகின்றது. இதனால் நமக்குப் புலப்படுவது என்னவெனில் நம்முன்னோர் மிகவும் அறிவு படைத்தவர்களாக விளங்கினார்கள். அவர்கள் அன்று சுகாதார முறைப்படியே ஒழுகினார்கள் என்பதுவேயாகும்.

இந்து சாதனம் 07 - 11 - 1958

# சாதனையும் போதனையும்

இன்றைய விஞ்ஞான உலகில் எங்கு பார்த்தாலும் போதனையே அதிகரித்து வருகின்றது. எக்காரியத்தையும் போதனை செய்தல் மிகவும் இலகுவான காரியமாகும் ஆனால் அவற்றைச் சாதனையில் செய்வது மிகவும் கஷ்டமாகும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் வசித்த ஞான்று தாம் போதித்தனவற்றையெல்லாம் சாதனையில் செய்து காட்டினார். சைவவினாவிடையில் எழுதியவாறு ஒழுகினார். இன்று நம்மில் பலர் மேடைகளில் மிக அழகாகப் பேசுவார்கள். அதில் காற்பங்குகூடச் சாதனையில் செய்யமாட்டார்கள். இதனால் ஒரு பிரயோசனமும் இல்லை. ''ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது'' என்ற பழமொழிப்படி சாதனையில்லாத போதனையினால் யாதொரு பயனுமில்லை.

நாம் பலவித சாத்திரங்களையெல்லாம் நூல்கள் தோறும் படிக்கின்றோம். திருமுறைகள் புராண இதிகாசங்கள் யாவற்றையும் பயில்கின்றோம். அந்த நூல்களில் கூறப்பட்டனவற்றில் ஒரு சிறு பகுதியையாவது சாதனையில் கையாளுகின்றோமா? இல்லை காரணம் மேலை நாட்டு நாகரீகம் நம்மை அவ்வளவு தூரத்திற்குக் கவர்ந்துவிட்டது. பழமையைப்பற்றிப் பெருமை பேசுகின்றோம். சைவத்தின் தத்துவங்களை எடுத்துப் புகழ்கின்றோம். நடைமுறையில் அவற்றையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு ஆங்கில பாணியில் வாழ்க்கை நடத்துகின்றோம்.

முக்கியமாகச் சிறுவர்கள் சமய சாதனைகளைச் செய்து பழகிக் கொள்ள வேண்டும். அவ்வாறு சிறுவயதில் செய்து பழகிக்கொண்டால் பிற்கால வாழ்க்கைக்குப் பெருந்துணையாக அமையும். மாணவர் களுக்குச் சமய சாதனைகளைப் பயிற்றுபவர்கள் தாமும் அவ்வாறு ஒழுகுகின்றவர்களாய் இருத்தல் வேண்டும். அன்றேல் மாணவர் களைப் பின்பற்றச் செய்யமுடியாது.

சமய சாதனைகளை நோக்கும்போது எத்தனை நிமிடங்கள் கடவுள் வழிபாட்டில் செலவிடுகின்றோம். வருடத்தில் எத்தனை நாட் கள் விரத அநுட்டானங்களில் செலவிடுகின்றோம் ஆத்மீக நலனை முன்னிட்டு ஏதாவது செய்கின்றோமா? இவ்விதம் எல்லாம் சிந்திப்போ மானால் நம்மையிட்டு நாமே இரங்க வேண்டி வரும். நம்மில் பலர் இவ்வித சாதனைகள் செய்வதற்கு நேரம் இருக்காது என் கிறார்கள். தொழில் முயற்சியுடையவர்கள் இவ்வித சாதனைகளைச் செய்ய முடியாது என்று நொண்டிச் சாட்டுக் கூறுகின்றார்கள். இது எவ்வளவு அறியாமை. நமக்கெனச் சில நியதிகளை மேற்கொண்டு தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அதைச் செய்து வருவோமானால் அதில் எவ்வித கஷ்டமும் இருக்கமாட்டாது.

இன்று நாமெல்லாம் உண்டு உடுத்து இன்பமாக வாழ்வதே மேலென்க் கருதி வாழ்கின்றோம். பொருள் ஈட்டுவதும், புகழ் ஈட்டுவதும் பெரிய பதவியைப் பெறுவதுமே எமது குறிக்கோள்களாக விளங்குகின்றன. நமது சரீரத்திற்குள், ஆன்மா என்று ஒரு பொருள் இருக்கின்றது. அதை நன்னிலையடையச் செய்ய வேண்டும் என்று சிந்திக்கின்றவர்கள் மிகச் சிலரேயாகும். அங்ஙனம் சிந்தனையுடையவர்கள் ஆன்மவிசாரம் உடையவர்களாய்க் கடவுள் சாதனைகளைச் செய்து வருவார்கள்.

நாவுக்கரசு சுவாமிகள் நாம் செய்ய வேண்டிய சரியைத் தொண்டின் வகைகளையெல்லாம் ''நிலைபெறுமா றெண்ணுதியேல்'' என்ற பாடல்மூலம் மனத்திற்கு அறிவுறுத்துகின்றார். அது மாத்திரமா? அவற்றைச் சாதனையிலும் செய்து காட்டியுள்ளார். நாமெல்லாம் ஆலயத்தொண்டு செய்து சாதனை மூலம் இறைவனை வழிபட்டுத் தெய்வீக அருளைப் பெறுவோமாக.

# சைவப் பண்பாடு

மாணவர்கள் இளம் பிராயத்திலிருந்தே சைவப்பண்பாடுகளைப் பழகிக் கொள்ள வேண்டும். தாய் தந்தையருக்குக் கீழ்ப்படிதல், குரு உபாத்தியாயர் முதலாய பெரியோர்களை மதித்து நடத்தல் முதலாய நற்பண்புகளை மேற்கொள்ள வேண்டும். ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'', ''ஆலயந் தொழுவது சாலவும் நன்று'', ''தந்தை சொல் மிக்க மந்திரமில்லை'', தாயிற் சிறந்தொரு கோயிமில்லை'' இத்தகைய முதுமொழிகளை மதித்து நடக்கவேண்டும்.

சைவர்களாகப் பிறந்த நாம் சமய நெறிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. காலையும் மாலையும் கடவுளை வணங்குதல், விபூதி அணிதல், தேவார - திருவாசகங்களை மனனம் செய்தல், அவற்றைப் பக்தியுடன் ஓதுதல், சமய தீட்சை பெற்று ஆசாரசீலர்களாகத் திகழ்தல் இன்னபிறவும் அடங்கும், சமய நூல்களைக் கற்று அதிற் கூறப்பட்ட உண்மைகளை உணர்ந்து அதன்படி மாணவர் சமூகம் நடப்பார்களேயானால் எவ்வித இடர்களும் நேரிடமாட்டாது. சர்வ வியாபியாகிய இறைவனை ஆலயங்கள் தோறும் சென்று வழிபடுகின்றோம். அத்தகைய வழிபாட்டு முறைகளை மாணவர்களும் ஏனையோரும் அறிந்திருத்தல் அவசியம். ஆலயத்திற்கு எவ்வாறு செல்லுதல் வேண்டும். அங்கே எங்ஙனம் வழிபாடு செய்தல் வேண்டும். இத்தகைய நடைமுறைகளை அறிந்து அதன்படி செயற்பட வேண்டும்.

நாமெல்லாம் விஞ்ஞான உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். சமய நெறிப்பாடுகளை அறியாது அல்லற்படுகின்றோம். மாணவ சமூகம் வெளிநாட்டு மோகத்திற் சிக்குண்டு சமய ஆசார முறைகளைக் கைவிட்டு விட்டது. இன்று நாம் முப்பது நாற்பது ஆண்டு பின்னோக்கிப் பார்ப்போமானால் அன்று தாய், தந்தையர், குரு, உபாத்தியாயர் முதலாய பெரியோர்களை எங்ஙனம் மதித்து நடந்தார்கள் என்பதை அறிய முடிகின்றது. ஆனால் இன்று இவை யாவும் மாற்றம் அடைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. பெரியோரைக் கனம்பண்ணும் பண்பாடு குறைந்து வருகின்றது. கல்வி நிறுவனங்கள் மாணவர்களுக்குச் சமயநெறிகளைப் புகட்டி அதன்படி ஒழுக வழிவகுக்க வேண்டும். அவ்வாறு செய்வார்களே யானால் சைவப் பண்பாடு சிறப்புற்று மிளிரும். சைவர்களாகிய நமக்கு இறைவனின் இணையற்ற திருவருள் தேடாமல் இருக்கத் தேடி வரும். மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்கும்.

*16 - 03 - 1990*

★

# மாணவ உலகில் மூவகை நிலையினர்

நன்னூல் ஆசிரியரான பவணந்திமுனிவர் மாணவர்களை மூன்று வகையாக வகுத்துள்ளார். முதல் மாணவன், இடை மாணவன், கடை மாணவன் என்பது அவரின் பிரிவுகள் இந்த முத்திறத்தாருடைய இயல்புகளையும் அவர்கள் கற்கும் கல்வி எவ்வாறு மனதில் பதியும் என்பதையும் உதாரண மூலம் விளக்குகிறார்.

முதல் மாணாக்கன்

முதல் மாணாக்கன் அன்னத்தையும் பசுவையும் போன்றவன் என்பது அவரின் அறிவுரை. அன்னப் பறவையானது பாலையும் நீரையும் கலந்து கொடுத்தால் நீரைப் பிரித்து விட்டுப் பாலை மாத்திரம் உட்கொள்ளும். அத்தன்மை போல் முதன் மாணாக்கர் குணத்தையும் குற்றத்தையும் வேறாகப் பிரித்துக் குணத்தை மாத்திரம் மனதில் பதித்துக் கொள்வர். பசுவானது புல் உள்ள இடங்களில் நிறைய மேய்ந்துவிட்டுப், பின்னர் ஓர் இடத்தில் இருந்து தான் உட்கொண்ட உணவைச் சிறிது சிறிதாக வருவித்து அசைபோடும். முதன் மாணாக்கனும் கல்வி நிரம்பிய ஆசிரியர்களிடத்தில் தன் உள்ளம் நிறையக் கற்றுப், பின்னர் தனியிடத்திலே இருந்து தாம் கற்றவற்றைச் சிந்தித்துத் தெளிவர்.

இடை மாணாக்கன்

இடை மாணாக்கர்களுக்கு மண்ணையும், கிளியையும் உதாரண மாகக் காட்டுகின்றார். மண் (பூமி) உழவர் வருந்திப் பயிர் செய்தளவு பலனையே கொடுக்கும். இடை மாணவனும் ஆசிரியர் வருந்திக் கற்பித்த முயற்சியளவு கல்வியையே கற்பர். கிளியானது தனக்குச் சொல்லிக் கொடுத்த சொல்லையன்றிப் பிறிதொன்றையும் சொல்ல மாட்டாது. அஃதேபோல் இடைமாணாக்கனும் தனக்கு ஆசிரியர் சொல்லிக்கொடுத்த நூற்பொருளையன்றிப் பிறிதொன்றையும் கூற மாட்டார் என்கிறார்.

கடை மாணாக்கன்

கடைமாணவனுக்கு இல்லிக்குடம், ஆடு, எருமை, பன்னாடை ஆகிய நான்கு பொருட்கள் உதாரணமாகக் கூறப்படுகின்றன. பொள் ளற்குடம் நீரைவார்க்கும் தோறும் ஒழுகவிடுதல்போலக் கடை மாணாக்கனும் நூற்பொருளைக் கற்கும் தோறும் மறந்து விடுவர் என்கிறார். ஆடு பல செடிகள் தோறும் சென்று மேய்தல் போலக் கடைமாணாக்கனும் பல ஆசிரியர்களிடம் சென்று பாடங் கேட்பான் என்கிறார். எருமையானது குளத்து நீரைக் கலக்கிக் குடிக்கின்ற தன்மைபோலக் கடைமாணவனும் ஆசிரியரை வருத்திப் பாடங் கேட்பார் என்கின்றார். பன்னாடையானது தேன் முதலாய நல்ல பொருள்களைக் கீழே விட்டுவிட்டு அழுக்குப்பொருள்களைப் பற்றிக் கொள்ளுதல் போன்று கடைமாணாக்கனும் அறிவுநூற் பொருளை மறந்துவிட்டுத் தீய பொருள்களை மனதில் பதித்துக் கொள்ளுவான் என்பது அன்னாரின் கூற்று.

''அன்னம் ஆவே
மண்ணொடு கிளியே
இல்லிக் குடம் ஆ
டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை
கடைமா ணாக்கர்.''

ஈழநாடு 26 – 04 – 1987

★

# நிலையற்ற உடம்பு

எலும்பு, தோல், இரத்தம் இவற்றின் தொகுதியால் ஆனது இவ்வுடம்பு. பூமியில் இவ்வுடம்பு தோன்றும்போதே இதன் அழிவும் நிச்சயிக்கப்பட்டுவிடுகின்றது. இந்தச் சரீரம் எண்பத்துநான்கு நூறாயிரம் யோனிபேதத்தின் பின் இறைவனால் எமக்குக் கொடுக்கப்படுகின்றது. நாம் இந்தச் சரீரத்தில் இருக்கும்போதே மேலான புண்ணியங்களைச் செய்து இறைநெறியைப் பெறவேண்டும். இல்லையேல் மீண்டும் யோனிவாய்ப்பட்டுப் பிறக்க நேரிடும். இறைவன் இந்த உடம்பை நமக்குத் தந்ததே தன்னை வழிபட்டு மோட்சத்தை அடைவதற்கேயாகும்.

பண்டைக் காலத்தில் வாழ்ந்த நாயன்மார்கள் முனிவர்கள் ஆகியோர் இவ்வுடம்பு அழியுமுன் நிலையுள்ளதாகிய மோட்சநெறியை அடைய அல்லும் பகலும் அரும்பாடுபட்டார்கள். அதனாலே பலனும் பெற்றார்கள். ஆனால் நாமோ இச்சரீரம் நிலையானது என எண்ணிக் கொண்டு உடம்பு வளர்ச்சிக்கு வேண்டிய உணவுவகைகளைத் தேடுவதிலும், உல்லாச வாழ்க்கை வாழ்வதிலும் காலத்தை வீணாக்குகின்றோம். இதனையே வள்ளுவப் பெருந்தகை ''நில்லாதவற்றை நிலையின என்றுணரும் — புல்லறிவாண்மை கடை'' என்றார்.

இன்றைய விஞ்ஞான உலகில் நாம் காணக்கூடியதாக எத்தனையோ பெருமக்கள் மிகுந்த பேரும் புகழும் படைத்தவர்களாகவும் தனவந்தவர்களாகவும் வாழ்ந்தார்கள். ஆனால் அவர்கள் இன்று இல்லை. காரணம் அவர்களது உடம்பு அழிந்து விட்டது. இதற்குத் தெய்வப்புலவர் கூறுவதைச் சற்று நோக்குவோம். "நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு'' என்கிறார். பட்டினத்தடிகள், மார்க்கண்டேயர் முதலானோர் நிலையான பேற்றைப் பெற்றவர்கள்.

நாலடியார் என்னும் நூலில் யாக்கை நிலையாமையைக் கூறும் போது என்ன சொல்கிறார் தெரியுமா? பறவைகள் வந்து மரங்களிற் கூடுகட்டி வாழ்ந்துவிட்டுப் பின்னர் அந்த இடத்தை விட்டுச் செல்வது போல மக்களாகிய நாமும் ஒருவரையுங் கேளாது வந்து உறவினர்களாகத் தோன்றிப் பின் சிலகாலம் வாழ்ந்து விட்டு ஒருவரிடமும் சொல்லாமல் இறந்து விடுகின்றோம் என்கின்றார். இதனால் உடம்பின் நிலையற்ற தன்மை புலனாகின்றது. பாடலைச் சிறிது பார்ப்போம்.

''கேளாதே வந்து கிளைகளா யிற்றோன்றி வாளாதே போவரால் மாந்தர்கள் – வாளாதே சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல் யாக்கை தமக்கொழிய நீத்து''

நிலையற்ற உடம்பைக் கொண்டு நிலையான பேற்றைப்பெற முயற்சிக்க வேண்டும். இளமை முதுமை என்று நோக்காது எக்காலத்திலும் இறைவழிபாடு செய்யவேண்டும். சமயநெறிகளை மேற்கொண்டு பாவச் செயல்களைத் தவிர்த்து புண்ணியங்களைச் செய்து ஆன்மாவை ஈடேற்ற வேண்டும்.

★

# திருவாசகம் தந்த சிவஞானச் செம்மல்

சைவம் காத்த பெருங்குரவர் நால்வர். இவர்கள் தோன்றியிரா விட்டால் சைவம் சீர் பெற்றிருக்க முடியாது. இவர்களால் அருளப் பட்ட தேவார திருவாசகப் பொக்கிஷங்கள் என்றும் அழியாத தன்மையுடையன. அந்நால்வரும் நான்குவித தொடர்பு முறையால் இறைவனை வழிபட்டு அருள் பெற்றனர். ஞானசம்பந்தர் தந்தைக்கும் மைந்தனுக்கும் உள்ளது போன்ற தொடர்பைப் பெற்றிருந்தார். அவர் கேட்பவற்றையெல்லாம் இறைவன் அப்படியே கொடுத்தார். நாவுக்கரசர் எஜமானுக்கும் வேலைக்காரனுக்கும் உள்ளது போன்ற தொடர்பைப் பெற்றிருந்தார். இறைவன் எழுந்தருளியிருக்கும் ஆலயங்கள் தோறும் தொண்டு செய்வதே பெரும்பேறெனக் கருதி வழிபட்டார். சுந்தரர் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு இறைவனைத் தோழனாகப் பாவித்து வழிபட்டவர். இறைவனும் இவரது வேண்டுகோளின்படி இவரின் தேவைகளைப் பூர்த்தி செய்தார். சிவஞானச்செம்மலாகிய மணிவாசகரோவெனின் பதியாகிய இறைவனை நாயகனாகவும் பசுவாகிய ஆன்மாவை நாயகியாகவும் பாவித்து வழிபட்டவர். இவரது வழிபாட்டுமுறை உலக மக்களுக்கு மிகவும் பயன்படத்தக்கது.

சமயகுரவர் மூவர்க்கும் ஆண்டிற்கு ஒரு முறை குருபூசை செய்து விழாவெடுத்து வழிபடுகின்றோம். ஆனால் மணிவாசகப் பெருந்தகைக்கு அவ்வாறு செய்வதுடன் அமையாது மார்கழி பிறந்ததும் திருவாதிரை காலங்களிலே அவரது ஞாபகமே எழுகின்றது. ஆதியில் தோன்றிய கோயிலாக விளங்கும் சிதம்பரத்தின் கண்ணே மணிவாசகர் வசித்தஞான்று அங்கு நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் திருவாசகப் பாடலாக அள்ளி வழங்கிய பெருமை மணிவாசகரையே சாரும். அன்னாரது திருவாசகப் பாடல்கள் நமக்குத் தேடக்கிடையாத திரவியமாக அமைந்துள்ளன. ''திருவாசகத்துக் குருகாதார் ஒருவாசகத்துக்

கும் உருகார்'' என்பது ஆன்றோர் வாக்கு. நெக்குருகச் செய்வது திருவாசகம். திருவாகம், திருக்கோவையார் ஆகிய இரண்டினையும் சைவ உலகித்குத் தந்த சிவஞானச் செம்மலாகிய மணிவாசகப் பெருந்தகையின் பெருமையை அளவிட்டுக் கூறமுடியாது.

மணிவாசகப் பெருந்தகையின் மாண்பு மிக்க சரிதையைக் கடவுண் மாமுனிவர் ''திருவாலூரடிகள் புராணம்'' என்னும் பெயருடன் சைவ உலகிற்கு அழித்துள்ளார். இப்புராணத்தில் சைவ சித்தாந்த உண்மைகளும் பதி, பசு பாச விளக்கமும் நன்கு விளக்கப்பட்டுள்ளது. ஆலயங்களிலே ஆண்டுதோறும் திருவெம்பாவையின்போது திருவாதவூரடிகள் புராணம் படித்துப் பயன்சொல்லப்படுகின்றது. வாதவூர்ப் புராணத்தின் மகிமையைப் பின்வரும் பாடல் நன்கு விளக்குகின்றது.

''வாதவூ ரந்தணர் தந்திரு
வாய்மைவிளங்கு திருக்கதை
ஓதின ரன்புட னொண்செவியூடு
முகந்து கேட்டவர்
போதமெய்ஞ் ஞானமுறுஞ் சுக
போகமுடன் புகழ்பெறுவர்கள்
தீதில் பவங்க டொலைந் துபின்
சேர்குவர்வண் சிவலோகமே.''

திருவாதவூரடிகள் புராணத்தைக் கடவுண்மாமுனிவர் பாடத் தொடங்கும்போது முதலில் விநாயக வணக்கமும் அடுத்துக் கடவுள் வாழ்த்து, அவையடக்கம் என்பனவும் ஏழு பாடல்கள் மூலம் கூறுகின்றார். அடுத்து நாட்டுவளம் கூறுமிடத்துப் பழமை மிக்கதும் பரமசிவன் அருளோடு அகத்திய முனிவருக்குத் தமிழை உபதேசிக்க அவர் நன்மாணாக்கருக்குக் கற்பித்ததுமாகிய வளங்களையுடைய தென்றும், நகர்வளங் கூறுமிடத்துத் தேவரது நகரிலும் சிறப்புமிக்க தென்றும் கூறும் நயம் வியக்கற்பாலது.

வேதங்களை அத்தியயனஞ் செய்கின்ற அந்தணர்கள் வசிக்கப் பட்ட திருவாதவூரிலே, அருள்நிறைந்த ஆமாத்தியர் குடியிலே, தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத சைவநெறித் தலைவராகிய சம்புபாதாசிரியர் என்பவரும் அவரது ஒப்பற்ற மனைவியாகிய சிவஞானவதி அம்மையாரும் செய்துகொண்ட அருந்தவத்தின் பயனாக, உலகில் அஞ்ஞானமாகிய இருள் நீங்கவும் பரசமயங்களாகிய நக்ஷத்திரங்கள் ஒளி மழுங்கவும் சிவனடியார்களுடைய இருதய கமலங்கள் மலரவும் சிவஞானவதி அம்மையாருடைய திருவயிற்றின் கண்ணே ஞான சூரியராகிய புத்திரர் திருவவதாரஞ் செய்தார். இனிமேல் புத்தகுருவுடனே வாதஞ் செய்து சிவபெருமானது திருநாமத்தை உலகெங்கும்

தழைக்கச் செய்பவராகிய அப்புதல்வருக்குத் ''திருவாதவூரர்'' என்னும் நாமத்தைப் புனைந்தார்கள். திருவாதவூரர் என்னும் தெய்வக் குழந்தை வளர்ந்த தன்மையை ஆசிரியர் நெற்பயிருக்கு ஒப்பிடுவது நோக்கற்பாலது.

''தவமெனும் பெரியவித்துட்
டங்கியே யங்குரித்துப்
பவமெனும் பங்கநீங்கிப்
பயிலருட் குருத்துண்டாகி
அவமெனும் களைகணீங்கி
யாக்குவோ னருளாலுண்மைச்
சிவமெனும் விளைவுண்டாக
வளர்ந்தது தெய்வச்சாலி''.

சிவஞானச் செம்மலாகிய அக்குழந்தைக்குச் சருக்கரையும் முக்கனிகளும் பசுவின் நறிய பாலும் ஆகிய இவற்றை ஒருங்கு சேர்த்து அன்னப்பிராசனஞ் செய்தார்கள். வாதவூரராகிய செந்நெற்பயிர் வளர்ந்து உரிய வயதை அடைந்ததும் சௌளம், வித்தியாரம்பம் என்பன நடைபெற்றன. ஏழாவது ஆண்டை அடைந்ததும் அந்தணர்களின் விசேட சின்னமாகத் திகழும் முப்புரி நூல் தரித்தல் நடைபெற்றது. இவ்வாறு சகல சடங்குகளும் நடைபெற்றபின் நமது வாதவூர்ச்செம்மல் சகல கலைகளையும் பதினாறு வயதிற்குள் கற்றுத் தேறினார்.

வாதவூரில் அவதரித்த சிவஞானச் செம்மல் இங்ஙனம் சகல கலைகளிலும் பாண்டித்தியம் பெற்று விளங்குவதை அரிமர்த்தன பாண்டியன் கேள்வியுற்றான். வாதவூரரை அழைத்து உரிமைத் திறம் நல்கித் ''தென்னவன் பிரமராயன்'' என்ற சிறப்புப் பெயரையும் நல்கி முதன் மந்திரி உத்தியோகத்தைக் கொடுத்து முத்துச் சிவிகை, சாமரம், வேழம், பீதாம்பரம் என்பவற்றையும் சன்மானித்தான். இவ்வாறு முதன்மந்திரி உத்தியோகத்தைப் பெற்ற வாதவூரர் வெண்மதியின் தோற்றம்போல விளங்கினார். மேலும் இவர் தருமஞ் செய்பவர்களிடத்தும், வறியவர்களிடத்தும் அன்பு உடையவராய்ப் பூமி பாரத்தைச் செவ்வனே நடாத்திக் கொண்டிருந்தார்.

திருவாதவூரர் இவ்விதம் அரசியற்றும் நாளில் ஆகம நூல்களின் வாயிலாக உடம்பு, உயிர் எடுக்கும் தன்மையும் இறைவன் போக மோட்சங்களைக் கொடுத்து நடத்தும் முறைகளையும் அறிந்தார். அதன்மேல் கொடிய வெய்யிலில் வருத்தமுற்றவர்கள் நிழலை விரும்பும் தன்மைபோலச் சிவபிரானது திருவடிக்கு ஆளாக விரும்பினார். உலக வாழ்வின் நிலையாமை உணர்ந்து கூத்தாடிகளது

உண்மைத் தன்மையும் வேஷமும் வேறாந் தன்மைபோலப், பிரபஞ்சப் பற்று அற்றவராய் அரசநீதியை நடத்திக்கொண்டிருக்கையில் உண்மை ஞானத்தை உபதேசிக்கும் ஞானாசாரியரை உள்ளத்தால் ஆய்ந்து கொண்டிருந்தார்.

ஓர் தினம் அரிமர்த்தன பாண்டியன் சகல சிறப்புக்களோடும் உத்தாணி மண்டபத்தில் வீற்றிருக்கும்போது சில தூதுவர்கள் வந்து ஆரியதேசத்தினின்றும் குதிரைகள் வந்திருப்பதாகக் கூறினார்கள். அதினைக் கேட்ட பாண்டிய அரசன் தனது உயிரும் உடலுமாயுள்ள திருவாதவூரரைப் பார்த்து நல்ல குதிரைகள் வாங்கிவருமாறு கூறினான். அவர் உடன்பட்டதும் தன்னுடைய தேவவிமானம் என்னும் இரவியசாலையுட் புகுந்து தருமநெறியால் வந்த பொருளில் நாற்பத் தொன்பது கோடி பொன்னைக் கொடுத்தான். வாதவூரடிகள் நல்ல சுபதினத்திலே நால்வகைச் சேனைகளும் புடை சூழ மாளிகையை விட்டு நீங்கி மதுரையின் எல்லையைக் கடந்து பல ஊர்களையும், காடுகளையும் நீங்கிச் செல்வராயினர்.

வாதவூரர் இவ்வாறு செல்கையில் பரம்பொருள் இவரை ஆட்கொள்வான் விரைந்து ஞானதேசிகத் திருமேனி கொண்டு, கணநாதர்களாகிய அடியவர்கள் சேவிக்கக் கைலையை விட்டு நீங்கித் திருப்பெருந்துறையின்கண் வந்து ஓர் குருந்தின் கீழ் வீற்றிருந்தருளினார். சமுத்திரத்தில் அகப்பட்டவர்கள் கரையை அடைய விரும்புந் தன்மைபோலத் திருவாதவூர்ச் செம்மல் திருப்பெருந்துறையின் அண்மையை அணுகினார். சிவாகம ஒலி அவரது செவிப்புலன்கண் சென்றது. அவ்வொலியின் காரணத்தை அறிந்து வருமாறு ஏவலாளர்களை ஏவினார். அவர்கள் சென்று பார்த்து வந்து சிவனை நிகர்த்த ஒரு பெரியவர் அடியார்கள் புடைசூழ இருக்கின்றார் என்றார்கள். அதனைக் கேட்ட மாத்திரதே வாதவூரர் சிவிகையை விட்டிறங்கிச் சென்று தெய்வ சபையைக் கண்டார்.

சிவஞானச்செம்மல் தெய்வசபையைக் குறுகி, அங்கு நடுநாயகமாக வீற்றிருந்த ஞானதேசிகரை மனத்தால் வணக்கஞ் செய்து சுவாமீ! உமது கரத்தில் இருக்கும் புத்தகம் யாது? என்றார். அதற்கு ஞானதேசிகர் சிவஞானபோதம் என்றார். சிவம் - ஞானம் போதம் இவற்றைத் தெளிவுறுத்துமாறு வாதவூரர் வேண்டினார். ஞானாசாரியராகிய சிவபெருமான் பின்வருமாறு எடுத்துரைத்தார். சிவமாவது பரப்பிரமம். ஞானம் அவ்வஸ்துவை அடைதல். போதம் அதனைத் தேர்ந்து தெளிதல். இவ்வாறு கூறியதும் வாதவூரர் தம்மை ஆட்கொள்ளுமாறு வேண்டினார். அடியார் கூட்டத்துள் மேம்பட்ட ஒருவரும் இவரை அடிமைகொள்ள வேண்டுமென்று இரந்தார். கிருபா சமுத்திரமாகிய பரம்பொருள் அவ்வேண்டுகோளை ஏற்று அவ்வடியவரை வேண்டிய ஆயத்தங்களைச் செய்யுமாறு பணித்தார்.

பெரியவராகிய அவ்வடியவர் கோயிலும் அதன் கண்ணே ஆசனமும் அமைத்தார். அர்த்தயாமமானது. வாதவூர்ச்செம்மலுக்கு மாயாமலம் தொலையும் சமயமாதலும் பரமாசாரியார் கங்கை நீரில் ஸ்நானஞ் செய்து பட்டு வஸ்திரம் தரித்து ஆசனத்தின் மீது அமர்ந்தார். வாதவூரரும் ஸ்நானஞ் செய்து வெண்பட்டு உடுத்து, நீறணிந்து பரமாசாரியரது சந்நிதியில் வந்து திருவடிப் பூசை செய்து சருக்கரை கலந்த பாலாற் சமைக்கப்பட்ட நல்ல திருவமுதையும் முப்பழங்களையும் பொற்பாத்திரத்திலே இட்டு நிவேதித்துத் தூப தீபங்காட்டி வழிபட்டார்.

அதன்மேல் வாதவூரர் ஞானாசாரியரது முன்னிலையில் அமர்ந்தார். பரமசிவன் இவரது பந்தனை ஒழியும் வண்ணம் அருட் பார்வை நல்கிச் செவிப்புலன் வழியே உபதேசமும் செய்தருளினார். வாதவூரர் மேலும் வணங்குதலும் திருவடி தீட்சையும் செய்தருளினார். வாதவூரருக்கு மெஞ்ஞானம் உதயமானதும் ஞானாசாரியார் அவரை வேறாக அமரச் செய்து ஆகமத்தின் பொருளை உபதேசித்தருளினார்.

இவ்விதம் உபதேசங்கள் முடிந்ததும் வாதவூர்ப் பெருந்தகை பாண்டியன் கொடுத்த திரவியங்களையெல்லாம் அவர் முன் வைத்து வணங்கினார். அப்பொருள் பரமாசாரியரது கட்டளைப் பிரகாரம் தருமநெறியில் செலவழிக்கப்பட்டது. திருவாதவூரர் சீவன்முத்தரானார். அரசனைப் போன்ற சிறப்புக்களுடன் வந்தவர் கௌபீன உடையும் விரித்த குஞ்சியும் உடையவரானர். இதனைக் கண்ணுற்ற சேனாசமுகத்தினர் இவரை அணுகிக் குதிரைகள் கொண்டு செல்ல வேண்டுமென்பதை ஞாபகமூட்டினார்கள். சிவஞானச் செம்மல் அவர்களையெல்லாம் அகலச் செல்லுமாறு பணித்தார்.

வேதனைகொண்ட சேனாவீரர்கள் பாண்டியனுக்கு விஷயத்தை விண்ணப்பித்தார்கள். பாண்டியன் உடன் வருமாறு திருமுருகவோலை அனுப்பினான். அதனைக் கண்ணுற்ற பரமாசாரியர் ஓர் மாணிக்கக் கல்லையும் கொடுத்துத் தாம் ஆவணிமூல நாளில் குதிரைகள் கொண்டு வருவதாகவும் ஏகுமாறும் பணித்தார். வாதவூரர் தூதுவருடன் பாண்டியனை அணுகி மாணிக்கமணியையும் நல்கி, ஆவணி மூல நாளில் குதிரைகள் வரும் என்று கூறினார். அரசன் வாதவூரருக்குச் சன்மானஞ் செய்து இல்லிற்குச் செல்லுமாறு பணித்தான்.

மேற்குறிப்பிட்ட தினத்திற்கு இரு தினங்கட்கு முன் சேவகர்கள் அரசனை அணுகித் திருப்பெருந்துறையின்கண் குதிரைகள் வரவில்லை என்று கூறினார்கள். பாண்டியன் கட்டளைப்படி வாதவூரர் சிறை

யில் அடைக்கப்பட்டார். இவரது வருத்தத்தை நீக்கப் பரமசிவன் திருவுளங்கொண்டார். குதிரைகள் நரிகளாக மாறின. பாண்டியன் வெகுட்சி கொண்டு வாதவூரரைக் கோட்டின்கண் நிறுத்தினான். வாதவூரரின் மேல் இரக்கங்கொண்ட பரமசிவன் கங்கையைப் பெருக் கெடுக்குமாறு விடுத்தார். அது பெருக்கெடுத்து வைகைநதியுடன் சேர்ந்து நாட்டை அழித்தது வாதவூரர் கோட்டினின்றும் நீக்கப்பட் டார். அணைகட்ட வருமாறு மதுரை மக்களுக்கு அழைப்பு அனுப் பப்பட்டது. செம்மனச்செல்வி என்னும் அம்மையாருக்கும் ஒரு பங்கு வந்தது. மதுரைமாநகரவாசிகள் வந்து அணை கட்டினார்கள். செம்மனச்செல்விக்கு ஒருவருமில்லை. அம்மையார் சோமசுந்தரப் பெருமானுக்கு முறையிட்டாள். அவர் கூலியாளராக வந்து பிட்டமு துண்டு பிரம்படியும் பெற்றார்.

இச்செய்தி வாதவூரருக்கு எட்டியது. அவர் மந்திரி உத்தி யோகத்தைத் துறந்து பரமாசாரியரைத் திருப்பெருந்துறையின் கண்ணே வணங்கி, அடியார்களுடன் சிலகாலம் இருந்து பின் தலங் கள் தோறும் சென்று வழிபாடு செய்து சிதம்பரத்தை அடைந்து வணங்கி, அங்கு வசிக்கும் நாளில், ஓர் தபோதனர் ஈழம் வந்து பொன்னம்பலத்தின் மகிமையை எடுத்துரைக்க, அதனைக் கேட்ட புத்தகுருவும் புத்த அரசனும் சிதம்பரம் சென்று தில்லைவாழ் அந்தணர்களை வாதுக்கழைத்தனர். தில்லைவாழ் அந்தணர்கள் மறுதினம்வரை இருக்குமாறு கூறித் துயருடன் நித்திரை செய்தார்கள்.

நடராசப்பெருமான் தில்லைவாழ் அந்தணர்களுடைய கனவிலே தோன்றி மணிவாசகரை அழைக்குமாறு ஆஞ்ஞாபித்தார். அதன் பிரகாரம் மணிவாசகர் வந்து புத்தர்களைத் தருக்கத்தில் வென்றார். புத்தகுருமாரை ஊமைகளாக்கினார். ஈழ மன்னனுடைய மகளுக்கு ஊமை தீர்த்தார். பின் அரசனது வேண்டுகோளின் பிரகாரம் புத்த குருமாருக்கும் ஊமைத்தன்மையை நீக்கினார். அனைவரும் சைவரா னார்கள். ஈற்றில் மணிவாசகரது திருவாசகம், திருக்கோவையார் ஆகிய இரண்டினையும் சிவபிரானே வந்து எழுதி முடித்து மறைந் தருளினார். மணிவாசகப் பெருந்தகையும் தில்லையுளார் திருவாசகத் தின் பொருள் கேட்க, கைகாட்டித் தம்முருவம் காட்டாது பாலு டனே மேவிய நீர் போல் இரண்டறக் கலந்தருளினார்.

இந்துசாதனம்

14 - 01 - 1966.
14 - 02 - 1966.

★

# தருமத்தின் தத்துவம்

ஆறறிவு படைத்த மக்களாகிய நாம் இறைவனால் எமக்குக் கொடுக்கப்பட்ட பொருளைக் கொண்டு தருமஞ் செய்யவேண்டும். இது நமது ஆன்ம ஈடேற்றத்துக்கு வழிவகுக்கும். பொய்யா மொழிப் புலவர் தருமத்தைப் பற்றி என்ன கூறுகின்றார் தெரியுமா? "அறத்தான் வருவதே இன்பம், மற்றெல்லாம் புறத்தே புகழுமில" என்கிறார். எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதத்துள்ளும் சிறந்ததாகிய மானுடப் பிறவியைப் பெற்ற நாம் பிறவித் துன்பத்தை நீக்கவல்ல தருமத்தைச் செய்து கருப்பஞ்சாற்றைப் போன்ற பலனைப் பெறவேண்டும். உடம்பு சக்கை போன்றது. அழிந்துவிடும் தன்மையுடையது. நாம் செய்கின்ற தருமமோ அழியாது அடுத்த பிறவிக்கும் பலனைத் தரத்தக்கது. இது பற்றி நாலடியார் நவிலும் நற்றமிழ்ப் பாடலைச் சிறிது சிந்தனை மேற்கொள்வாம்.

"அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்
பெரும்பயனு மாற்றவே கொள்க — கரும்பூர்ந்த
சாறுபோல் சாலவும் பின்னுதவி மற்றதன்
கோதுபோல் போகு முடம்பு."

தருமஞ் செய்வதனால் செல்வம் பெருகும். அது குறைவுபடாது. ஆதிகாலத்தில் வாழ்ந்த அரசர்கள் தருமநெறி தவறாது அரசாண்டார்கள். அதனாற் பலனும் பெற்றார்கள். தெய்வப்புலவர் தருமத்துக்கு ஒரு விளக்கம் தருகின்றார். தருமஞ் செய்தவன் சிவிகையின் மேல் வீற்றிருந்து செல்கின்றான், தருமஞ் செய்யாதவன் சிவிகையைக் காவிச் செல்கின்றான். இனிக் குறட்பாவை நோக்குவாம்.

"அறத்தாறிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை"

இந்த உடம்பு என்றோ ஒருநாள் அழிந்துவிடும். எனவே நாம் அழிவில்லாததாகிய மோட்ச நெறியைப் பெறுவதற்கு அல்லும் பகலும் முயற்சி மேற்கொள்ள வேண்டும். இதற்கு நாலடியார் கூறும் விளக்கத்தைச் சிறிது கருத்திற் கொள்வோம்.

"மக்களா லாபம் பெரும்பயனு மாயுங்கால்
எத்துணையு மாற்றப் பலவானால் — தொக்க
உடம்பிற்கே ஒப்புரவு செய்தொழுகா தும்பர்க்
கிடந்துண்ணப் பண்ணப் படும்."

தருமத்தின் தத்துவம் வாதவூர்ப் புராணத்தில் ஓர் இடத்தில் பேசப்படுகிறது. அரிமர்த்தன பாண்டியன் திருவாதவூரரிடம் நாற்பத்தொன்பது கோடி பொன்னைக் கொடுத்துக் குதிரை வாங்கி வருமாறு அனுப்பினான். வாதவூரர் திருப்பெருந்துறையில் ஞானசாரியர் தமக்குத் தீட்சை அளித்ததும் அந்த நாற்பத்தொன்பது கோடி பொன்னையும் ஞானாசாரீயரின் திருவடிகளிலே வைத்து வணங்கினார். ஞானாசாரியர் அப்பணத்தை அறப்பணிகளுக்குச் செலவிடுமாறு அடியார்களுக்கு ஆணை பிறப்பித்தார். கூலியாளராக வந்து பிரம்பினால் அடியும் பெற்றார். இந்த நிகழ்ச்சிகள் யாவும் சிவபிரானது திருவிளையாடல்களே என்பதை அறிந்து அரிமர்த்தன பாண்டியன் என்ன கூறுகின்றான் தெரியுமா?

“பாம் பணி செய்யவேணிப் பரம்பனடியார்
கையில் ஈய்ந்த ஆம் பொருள் நமதேயானால்
அறம் பிறர்க்காவதுண்டோ ................”

என்று கூறுகின்றான். இதுவே தருமத்தின் தனித்துவத்தை விளக்குகின்றது.

அறத்தின் செயற்பாடுகளை ஆழ்ந்து ஆராய்வோமாயின் அது பற்பல வடிவங்களில் விரிவடைந்து காணப்படுகின்றது. இறைவனின் இருப்பிடமான தேவாலயங்களைக் கட்டுதல், அவற்றில் நித்திய நைமித்தியங்களை வழுவின்றி நடைபெற வகை செய்தல் சிவனடியார்களுக்கு மகேசுரபூசை செய்தல், வறியபிள்ளைகள் கல்வி கற்க வசதி செய்தல், ஏழைகளுக்கு அன்னதானஞ் செய்தல் இன்னோரன்ன பலவாம். நமது தகுதிக்கேற்றவாறு தருமஞ் செய்து பிறவிப் பயனை அடைவோமாக.



# திருக்குறள்

## அதிகாரம் 12 நடுவுநிலைமை

தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின்.

செப்ப முடையவ னாக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து.

நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே ஒழிய விடல்.

தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்.

கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச
நடுவொரீஇ யல்ல செயின்.

கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் றாழ்வு.

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
வுட்கோட்ட மின்மை பெறின்.

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்.

# அதிகாரம் - 13 அடக்கமுடைமை

அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்.

காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினூங் கில்லை யுயிர்க்கு.

செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின்.

நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற
மலையினு மாணப் பெரிது.

எல்லார்க்கு நன்றாம் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.


ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து.

யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

ஒன்றானுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயி
னன்றாகா தாகி விடும்.

தீயினாற் சுட்டபு ணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு.

கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து.



திருமுறை ஆசிரியர்கள்

மஹாத்மா அச்சகம், ஏழாலை.